වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
ANNUAL PERFORMANCE REPORT

2022



රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව
அரசாங்க அச்சுத் திணைக்களம்
DEPARTMENT OF GOVERNMENT PRINTING



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2022

அரசாங்க அச்சுத் திணைக்களம்
கொழும்பு - 08

அரசாங்க அச்சுத் திணைக்களம்





அரசாங்க அழுத்தகரின் செய்தி

2022 ஆம் ஆண்டு இலங்கை உட்பட முழு உலகிற்கும் சவால்கள் நிறைந்த ஆண்டாகும். ஏனெனில் 2020, 2021 ஆம் ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரவிய கொவிட் 19 தொற்று படிப்படியாக மறைந்து வந்த சந்தர்ப்பத்தில் தடைப்பட்டிருந்த சமூக, பொருளாதார நடவடிக்கைகள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் வழமை நிலைக்கு மீட்டெடுப்பதற்கு கடும் பிரயத்தனங்கள் உலகளவில் மேற்கொள்ளப்பட்ட வருடமாக 2022 ஆம் வருடத்தை நோக்க முடியும். இப்படியானதொரு சூழ்நிலையில் அரச அச்சுத் திணைக்களத்தினது பணிகளையும் வழமை நிலைக்குச் மீட்டெடுப்பதற்கு பாரிய பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. கொவிட் 19 தொற்று பரவிய காலத்தில் சுகாதார வழிகாட்டல்கள், தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, மக்கள் ஒன்றுகூடல் மட்டுப்படுத்தப்பட்டமை, அரச பணிகள் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களால் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட அச்சிடல் பணிகள், 2022 ஆம் ஆண்டில் நாடு வழமை நிலைக்குத் திரும்பியதால் வழமை போன்று கிடைக்க ஆரம்பித்தன. கட்டுப்பாடுகள் நிலவிய காலத்தில் மேற்கொள்ள முடியாமல் போன அல்லது பிற்போடப்பட்ட அச்சிடல் பணிகள் மீளவும் கிடைக்க ஆரம்பித்தவுடன் எமது நிறுவனம் மிகுந்த வேலைப்பளு கொண்ட நிலைக்குள்ளானது. இதேபோன்று நிருவாகம், நிதி மற்றும் கணக்காய்வுப் பிரிவுகளினதும் பணிகளை வழமை நிலைக்கு மீட்டெடுக்க கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

ஓர் உற்பத்தி நிறுவனம் என்ற வகையில் அரச அச்சுத் திணைக்களம் 2022 ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய மிகப்பெரும் சவாலாக அச்சிடல் பணிகளுக்குத் தேவையான மூலப் பொருட்களின் விலைகள் மிக வேகமாக உயர்வடைந்து சென்றமையைக் குறிப்பிடலாம். இதற்கமைய அச்சிடல் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் காகிதம், தீந்தை வகைகள், டோனர் போன்ற மூலப் பொருட்களின் விலைகள் ஏற்கனவே இருந்த விலைகளை விட சுமார் நான்கு மடங்கு அதிகரித்தமையால் உற்பத்திச் செலவுகளும் அதிகரித்தமையை கட்டுப்படுத்த முடியவில்லை. மூலப் பொருட்கள் உட்பட, சேவைகளின் சந்தை விலைகள் மிக வேகமாக உயர்ந்ததால் எமது திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடு போதாக் குறைவாக இருந்ததுடன் அவ் ஒதுக்கீடுகளுக்கான நிதியைப் பெற்றுக்கொள்வதும் சிரமமாக இருந்தது. இதேபோன்று நாட்டில் நிலவிய மிகக் கடுமையான அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை காரணமாகவும் மூலப் பொருட்களின் இறக்குமதி வெகுவாகக் குறைந்தது. எவ்வாறாயினும் இந்த அனைத்து சவால்களுக்கு மத்தியிலும் மிகச் சிரமப்பட்டு மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்து அரசாங்கத்தின் அத்தியாவசிய, அவசர மற்றும் அந்தரங்கமான பதிப்பு வேலைகள் உட்பட அரசாங்கத்தின் அனைத்து பதிப்புத் தேவைகளையும் பூரணப்படுத்துவதற்கு இயலுமானது.

மேலும் நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக 2022 இன் மூன்றாவது காலாண்டாகும் போது சேவைப் பங்கீட்டு முறையில் அரச நிறுவனங்களை இயக்குவதற்கும், அரச நிறுவனங்களின் மிகப் பெரும்பான்மையான அலுவலர்களுக்கு "வீட்டில் இருந்த வண்ணம் பணியாற்றல்" என்ற அடிப்படையிலும் தமது சேவைகளை வழங்க வேண்டியேற்பட்டது. இந் நாட்களிலும் அத்தியாவசியமான அச்சிடல் வேலைகளை மேற்கொள்வதுடன் அதிவிஷேட மற்றும் அத்தியாவசிய வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதற்காக அரச அச்சுத் திணைக்களத்தை இயங்கு நிலையில் வைத்திருக்க வேண்டிய பாரிய சவாலை எதிர்நோக்கியதை இங்கு குறிப்பிடவேண்டும். "வீட்டிலிருந்து பணியாற்றல்" என்ற முறைமையின் கீழ் இத் திணைக்களத்தின் சேவைகளை வழங்க முடியாத அதே நேரம் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கூட சேவையின் நிமித்தம் சமூகமளித்து உரிய காலத்தில் பதிப்பு வேலைகளைப் பூரணப்படுத்திக் கொடுப்பதற்கு பணியாளர்களுக்கு முடியுமானது.

மேலே கூறப்பட்ட இறுக்கமான சூழலிலும் கூட அரசாங்க அச்சுத் திணைக்களத்திடம் இருந்து எதிர்பார்க்கப்பட்ட சேவைகளை சீர் குழையாமலும் எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்கத்தை அசௌகரியங்களுக்கு உட்படுத்தாமலும் வழங்க முடியுமானதை இட்டு நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். அரசாங்கத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு பொதுமக்களுக்கு சீரான தொடர்பாடல் சேவையினை வழங்குவதனூடாக இத் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்தில் பேணுவதற்கு கிடைத்தமையையிட்டு அக மகிழ்வதோடு அந்த வெற்றியை அடைவதற்கு தமது சேவைகளை வழங்க முன்வந்த திணைக்கள ஊழியர்களுக்கும், தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய ஊடக அமைச்சுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

கங்கானி லியனகே,
அரசாங்க அழுத்தகர்,
அரசாங்க அச்சுத் திணைக்களம்.

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2022
நிறுவனத்தின் பெயர்: அரசாங்க அச்சுத் திணைக்களம்
செலவுத் தலைப்பு இல: 211

உள்ளடக்கம் **பக்க இல.**

அத்தியாயம் 01

நிறுவனத்தின் வரலாறு / நடைமுறைச் சுருக்கம் **01**

1.1 அறிமுகம் 01

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கும் பணிக்கூற்றும் (Vision and Mission) 02

1.3 பிரதான செயற்பாடுகள் 03

1.4 உள்ளக நிருவாக அமைப்பு 04

1.5 திணைக்களத்தில் இயங்கும் முக்கிய பிரிவுகள் 05

1.6 திணைக்களத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் 06

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் செயற்றிட்டங்கள் பற்றிய விபரம் 06

அத்தியாயம் 02

முன்னேற்றமும் எதிர்கால நோக்கும் **07**

விஷேடமானவை, வெற்றிகள், சவால்கள், எதிர்கால இலக்கு

அத்தியாயம் 03

வருடத்தின் நிதிச் செயற்பாடுகள் பற்றிய விபரம் **08**
(2022 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த)

3.1 நிதிச் செயற்பாடுகள் பற்றிய விபரம் 08

3.2 நிதி நிலைமை பற்றிய விபரம் 09

3.3 நிதி மூலங்கள் பற்றிய விபரம் 10

3.4 நிதி வெளிப்படுத்துகை பற்றிய குறிப்பு 11

3.5 வருமானம் திரட்டுதல் தொடர்பான விபரங்கள் 12

3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் உபயோகம் பற்றிய விபரங்கள் 12

3.7 நி.பி. (F.R) 208 இன் படி வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இத் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 13

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையிடுதல் பற்றிய விபரங்கள் 18

3.9 கணக்காய்வாளரின் அறிக்கை 18

அத்தியாயம் 04

செயலாற்றுகை வழிகாட்டி **19**

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை வழிகாட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலானது) 19

அத்தியாயம் 05

நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை (SDG) நிறைவேற்றிக் கொள்வதற்கான திட்டங்கள் **20**

5.1 இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தித் திட்ட நோக்கம் 20

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்வதில் கிடைத்த வெற்றிகள் 22

அத்தியாயம் 06

மனித வளம் பற்றிய விபரங்கள் **24**

6.1 பணியாளர் எண்ணிக்கை முகாமை 24

6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மேலதிக மனித வளம் செலுத்திய தாக்கம் 24

6.3 மனித வள அபிவிருத்தி 24

அத்தியாயம் 07

இணக்கப்பாட்டு அறிக்கை **25**

அத்தியாயம் 01

நிறுவனத்தின் தோற்றமும் பணிகளும்

1.1 அறிமுகம்

இலங்கைக் குடியரசின் அனைத்து பதிப்பக வேலைகளையும் நிறைவேற்றும் எதிர்பார்ப்போடு அனைத்து அரச நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணிக் கொண்டு, வேகமாக மாறிவரும் உலகத்தோடு இணைந்த பயணத்தில் அரசாங்க அச்சுத் திணைக்களம் அதி நவீன தொழில்நுட்பம் சார்ந்த உபகரணங்களின் துணையுடன் உயர் தரத்திலான பதிப்புக்களை வழங்கி வருகின்றது.

அரசாங்க வர்த்தமானி, பாராளுமன்ற ஹன்சார்ட் அறிக்கை, சட்டமூலங்கள், திணைக்கள ஒழுங்கு விதிகள், சட்டப் பிரமாணங்கள், பல்வேறு அமைச்சுக்களுக்கான படிவங்கள், திறைசேரி வரவு செலவு மதிப்பீடுகள் போன்ற வர்த்தக நோக்கம் சாராத அச்சீட்டுப் பணிகளை இத் திணைக்களம் நிறைவேற்றி வருகின்றது. மேலும் வர்த்தக ரீதியான பல அச்சீட்டு வேலைகளையும் இத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இதன் கீழ் பல்வேறுபட்ட படிவங்கள், அனுமதிச் சீட்டுக்கள், பாடசாலைப் பாடப் புத்தகங்கள், அறநெறிப் பாடசாலை நூல்கள், தபால் முத்திரைகள், தேர்தல் திணைக்களத்திற்கான அனைத்து படிவங்கள் மற்றும் அரச திணைக்களங்கள் / அமைச்சுக்களின் வருடாந்த அறிக்கைகள், வருடாந்த செயலாற்று அறிக்கைகள் போன்ற அச்சீட்டு வேலைகளையும் இத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் இணையதளம் ஊடாக நேரடியாக அரசாங்க வர்த்தமானி மூலமாக தகவல்களைப் பரிமாறுகின்ற பணியையும் அரசாங்க அச்சுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது www.document.gov.lk என்ற முகவரியினூடாக தேவையான தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளக் கூடிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்ததனூடே இத் திணைக்களம் ஒரு நிறைவான பணியை மேற்கொள்கின்றது. தற்போது அரசாங்க அச்சக ராகக் கடமையாற்றும் திருமதி கங்காணி லியனகே அவர்களின் வழிகாட்டலின் கீழ் இப்பணி களை உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்காக 1215 பணியாட்கள் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 தொற்றுப் பரவலின் தாக்கத்தோடு நிறுவன நடவடிக்கைகளை வழமைநிலைக்கு மீட்டெடுப்பதும், நாட்டில் தீவிரமான பொருளாதார நெருக்கடி மற்றும் அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு நிலவியபோது ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் அதன் பௌதீக மற்றும் நிதி வளங்களை மிகச் சரியான முறையில் முகாமை செய்துகொண்டு அரசாங்கத்தின் அத்தியாவசிய பதிப்பு பணிகளை மேற்கொள்ள முடியுமானது.

நிலையான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டளவில் அரசாங்க அச்சுத் திணைக்களம் அடைய வேண்டிய இலக்கை அடைந்து கொள்ளும் பாதையில், அடிப்படையை இனங் கண்டுள்ளதோடு பாதுகாப்பான பதிப்பு முறைமைகளை நவீன மயமாக்கி இலங்கைக் குடியரசின் அனைத்து பாதுகாப்பான அச்சுத் தேவைகளையும் நிறைவேற்றுவது இத் திணைக் களத்தின் முதன்மை எதிர்பார்ப்பாகும்.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கும் பணிக்கூற்றும் (Vision and Mission)

1.2.1 நிறுவனத்தின் தொலைநோக்கு (Vision)

"அச்சீட்டிலும் வெளியீட்டிலும் உயிர் நாடியாகத் திகழ்தல்"

1.2.2 பணிக்கூற்று (Mission)

"திறன் மிக்க பணிக்குழாம் மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரிய நேரத்திற்கு உயர் தரத்திலான நிறைவுடன் கூடிய வாடிக்கையாளர் திருப்தியடையும் வகையில் அச்சிடலும் பிரசுரிக்கும் சேவைகளையும் வழங்கல்."

1.2.3 நோக்கங்கள்

1. அச்சீடு மற்றும் வெளியீட்டு செயற்பாடுகளை உயர் தரத்துடன் நேர்த்தியாக உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்து கொடுத்தல்.
2. அச்சிடல் செயற்பாடுகளில் அதன் உயர் தரம், நேர்த்தி (Finishing) மற்றும் ஆக்கப்பூர்வமான தன்மையை உயர்த்துதல்.
3. நவீன தொழில்நுட்பம் மற்றும் செயல் முறைமைகளின் வளர்ச்சியூடாக திணைக் களத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
4. சகல அரச வெளியீடுகளையும் சாதாரண நியாயமான விலைக்கு தாமதமின்றி மக்கள் கொள்வனவு செய்யக் கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
5. நிர்வாக நடைமுறைகளையும் விதிமுறைகளையும் இலகுபடுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு உயர் தர சேவைகளை வழங்குதல்.
6. மனித வள அபிவிருத்தியினூடாக மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்து வதன் மூலம் வாடிக்கையாளர்கள் திருப்தியடையக் கூடிய வகையான உயர் தர சேவையை வழங்குதல்.
7. ஊழியர்களின் பாதுகாப்பையும் சுகாதார நலன்களையும் உயர் தரத்தில் வழங்குதல்.
8. திணைக்களத்தினுள் மகிழ்ச்சியாக சேவை செய்யும் சூழலை ஏற்படுத்துவதன் ஊடாக நுகர்வோர் திருப்தியடையும் வகையில் உயர் சேவையை பெற்றுக் கொடுத்தல்.
9. சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்காக தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல்.
10. அதி உயர் பாதுகாப்பான அச்சீடு பற்றிய மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

1. அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை, பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை, சட்டமூலங்கள், திணைக்கள ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை அச்சிட்டு வெளியிடுதல்.

2. கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகள், அமைச்சுக்களினது பல்வேறுபட்ட படிவங்கள், திறை சேரி வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் போன்றவற்றை அச்சிடும் வணிக ரீதியற்ற பதிப்பக வேலைகளை மேற்கொள்ளும் பணியில் ஈடுபடுதல்.

3. முத்திரைகள், படிவங்கள், அனுமதிச் சீட்டுக்கள், பாடசாலைப் பாடப் புத்தகங்கள், அறநெறிப் பாடசாலை நூல்கள், தேர்தல் திணைக்களத்தின் அனைத்துப் படிவங்கள் மற்றும் பல்வேறு அரச திணைக்களங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை அச்சிடுதல் போன்ற வணிக ரீதியான அச்சீட்டு வேலைகள்.

4. மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச மற்றும் அரச தனியார்துறை நிறுவனங்களுக்குத் தேவையான அச்சீட்டு வெளியீட்டு வேலைகளை மேற்கொள்ளல்.

5. இலத்திரனியல் ஊடகங்களினூடாக மக்களை நேரடியாக தகவல் தொடர்பாடலில் ஈடுபடுத்தலும் வாடிக்கையாளர்கள் திருப்தியடையும் வகையில் பதிப்பக மற்றும் வெளி யீட்டு சேவைகளை வழங்குதல்.

6. ஏனைய அச்சீட்டு மற்றும் பதிப்பீட்டு சேவைகளை வழங்குதல்.

1.4 உள்ளக நிருவாக அமைப்பு

1.5 திணைக்களத்தில் இயங்கும் முக்கிய பிரிவுகள்.

1.5.1 உற்பத்தி, திட்டமிடல் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு

திணைக்களத்துக்கு கிடைக்கும் அனைத்து ஓடர்கள் தொடர்பாகவும் work ticket வழங்குதல், அச்சீட்டு வேலைகளுக்கான செலவை மதிப்பீடு செய்தல், உரிய பற்றுச் சீட்டை வழங்குதல் உட்பட அச்சீட்டு வேலைகள் மற்றும் அதற்கு முன்னுள்ள வேலைகள் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். இந்தப் பணிகளுக்கு உதவும் முகமாக இந்தப் பிரிவின் கீழ் மேலும் சில உப பிரிவுகள் இயங்குகின்றன.

1.5.2. அதி உயர் பாதுகாப்பான அச்சீட்டுப் பிரிவு

திணைக்களத்திற்கு கிடைக்கும் அந்தரங்கமான அச்சீட்டுப் பணிகள் அனைத்தும் இந்தப் பிரிவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. தபால் முத்திரைகள், அவசர கட்டளைச் சட்டங்கள் அவை சார்ந்த வர்த்தமானிப் பத்திரங்கள், பரீட்சை வினாப் பத்திரங்கள், புகையிரத அனுமதிச்சீட்டுக்கள், தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டுகள் போன்ற அச்சீட்டுப் பணிகள் இந்தப் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பிரிவின் கீழ் லித்தோ இயந்திரப் பிரிவு, அந்தரங்க முத்திரைப் பிரிவு, அந்தரங்க ஒப்பு நோக்கல் பிரிவு, டிஜிட்டல் பிரிவு, அந்தரங்க புத்தகம் கட்டும் பிரிவு, அந்தரங்க கணினிப் பிரிவு போன்ற உப பிரிவுகள் இயங்குகின்றன.

1.5.3 முன் அச்சீட்டு வேலைகள்

அச்சீட்டு வேலைகளுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அனைத்துப் பணிகளும் இப்பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வகையில் கணினி பக்க வடிவமைப்பு, அச்சிடுதலுக்குத் தேவையான "பொலிமர்" மற்றும் "ப்லேட்" நிர்மாணித்தல் இப்பிரிவில் பூர்த்தி செய்யப்படுகின்றது. கணினிப் பிரிவு, ஒப்பு நோக்கல் பிரிவு உட்பட சில உப பிரிவுகள் இப்பிரிவின் கீழ் இயங்குகின்றன.

1.5.4 அச்சிடல் பிரிவு

அச்சிடலுக்காக திணைக்களத்திற்குக் கிடைக்கும் அதிகமான பணிகள் இப்பிரிவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. வாக்குச் சீட்டுக்கள், அரசாங்க நிறுவனங்களில் பாவிக்கப் படுகின்ற படிவங்கள், வர்த்தமானி, பாடசாலைப் பாடப்புத்தகங்கள் உள்ளிட்ட ஏனைய அச்சீட்டுப் பணிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் Web, Rotary, Cord, Sword, Letter press ஆகிய உப பிரிவுகள் இயங்குகின்றன.

1.5.5 புத்தகம் கட்டுதல் பிரிவு (Binding Unit)

வாடிக்கையாளர்களின் நலன் கருதி அச்சுப் பிரதிகள் அல்லது உபயோகப்படுத்தப் படாத காகிதம், ஏனைய பத்திரங்கள், வாடிக்கையாளரின் பாவனைக்கும், நீண்ட காலம் பாதுகாப்பதற்கும் பொருத்தமான அமைப்பில் ஒன்று சேர்த்து வைக்கப்படும் பிரிவே இதுவாகும். அதே போன்று அச்சிடப்பட்ட பக்கங்களை ஒன்று சேர்த்து மிகவும் கவர்ச்சி கரமான அமைப்பில் நேர்த்தியாக Bind பண்ணுவது இப்பிரிவின் பிரதான பணியாகும். இப்பிரிவின் கீழ் அதி உயர் தொழில் நுட்பம் சார்ந்த மற்றும் சாதாரண ஆனால் அவசர, மீள் கட்டுதல், பாடப் புத்தகம், P.S, நவீன Gathering போன்ற பணிகள் இடம்பெறுகின்றன.

1.5.6 விநியோகித்தல் பிரிவு

அச்சிடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து விதமான ஆவணங்களையும் விநியோகித்தல் இப்பிரிவின் முக்கிய பணியாகும். இந்தப் பிரிவின் கீழ் இயங்குகின்ற பதிப்பக விற்பனைக் கூடம் மூலம் சட்ட யாப்பு, நிதிப் பிரமாணங்கள், தாபன விதிக் கோவை, குற்றவியல் சட்ட வரைபுகள், தண்டனைச் சட்டங்கள் போன்ற அனைத்துப் பதிப்புக்களும் வாடிக்கையாளர்களுக்கு மானிய விலைக்கு விநியோகிக்கப்படுகின்றன. விநியோகித்தல் பிரிவின் கீழ் மேலும் சில உப பிரிவுகள் இயங்குகின்றன.

1.5.7 நிருவாகப் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து நிருவாகப் பணிகளும் இப் பிரிவினாலேயே நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இப்பிரிவின் பணிகள் பிரதானமாக இரண்டு உப பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தாபனப் பிரிவு, நிருவாகப் பிரிவு ஆகியவையே அப் பிரிவுகள். தாபனப் பிரிவின் கீழ் மனித வளம், நிருவாகம் ஆகிய உப பிரிவுகள் செயற்படும் அதேநேரம் தபால், ஓய்வூதியம், நேர முகாமை, கடன் நிருவாகப் பிரிவு ஆகியவை நிருவாகப் பிரிவின் கீழ் செயல்படுகின்றன. மனிதவள அபிவிருத்தி, போக்குவரத்து, தபால், ஓய்வூதியம், நேரக்கணிப்பீடு, கடன், ஊழியர் சேமநலன், பாதுகாப்பு ஆகிய உபபிரிவுகள் இங்கு இயங்குகின்றன. மனிதவள அபிவிருத்திக்குரிய நடவடிக்கைகள், ஊழியர்களின் சுகாதார சேம நலன் விவகாரங்கள், வளப்பிரிவு, போக்குவரத்து ஏற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விதமான நிருவாக நடவடிக்கைகளும் இப்பிரிவின் கீழே செயற்படுத்தப்படுவதனூடாக இத்திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவ தற்குத் தேவையான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் இப்பிரிவின் பணியாகும்.

1.5.8 நிதிப் பிரிவு

நிறுவனத்தின் அனைத்து நிதிசார் நடவடிக்கைகளும் இப்பிரிவின் மூலமே நிறைவேற்றப் படுகின்றன. சம்பளம், கடன் முற்பணம், வருமானங்கள், கொடுப்பனவுகள் மற்றும் Stock Controll ஆகிய 05 பிரதான பிரிவுகளுடன் நிதிப்பிரிவு இயங்குகின்றது. திணைக் களத்தின் கணக்கு, சம்பளம் மற்றும் கடன் முற்பணம், வருமானத்தைத் திரட்டுதல், கொடுப்பனவுகள் போன்ற பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் அச்சிடுதல் சார் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான சூழலை இப்பிரிவு உருவாக்குகின்றது.

1.5.9 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

நிதிப் பிரமாணத்தின் 133 ஆம் பிரிவு மற்றும் 2018/19 ஆம் இலக்க கணக்காய்வு தொடர்பான மசோதாவின் 40, 41 ஆம் விதிகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்படி இப்பிரிவு செயற்படுகின்றது. இதன் கீழ் திணைக்களத்தின் உள் நிருவாக முறையில் பங்கு கொண்டு அவற்றில் அவதானிக்கப்படும் தவறுகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கும் கையாளப்படுகின்ற உள்ளக தேடல்களின் தன்மை மற்றும் எண்ணிக்கை பற்றி தொடர்ந்தேர்ச்சியான கணக்கெடுப்பொன்றையும் சுயாதீன மான மதிப்பீடொன்றையும் நடாத்திச் செல்லும் நோக்கில் கணக்காய்வுகளை மேற் கொள்வதே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாகும்.

1.5.10 உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நேரடிப் பங்களிப்பு செய்யும் பிரிவுகள்

அச்சீட்டு வேலைகளின் பிரதானமான மூலப் பொருளான காகிதம் உட்பட நிறுவனத் திற்குத் தேவையான தேசிய மற்றும் சர்வதேச வழங்கல்கள், இயந்திர உபகரணப் பராமரிப்பு போன்ற பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் தேசிய வழங்கல் பிரிவு, சர்வதேச வழங்கல் பிரிவு, இதர வழங்கல் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு, பாதுகாப்பு மற்றும் சேமநலப் பிரிவு ஆகிய பிரிவுகள் செயற்படுகின்றன.

1.6 திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் / நிதியங்கள்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனங்களோ அல்லது நிதியங் களோ இல்லை.

1.7 வெளிநாட்டு உதவியில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் பற்றிய விபரம்

அவ்வாறான செயற்திட்டங்கள் இல்லை.

அத்தியாயம் 02

முன்னேற்றமும் எதிர்கால இலக்கும்

விஷேடமானவை, வெற்றிகள், சவால்கள், எதிர்கால இலக்கு

✓ 2020, 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 தொற்றுப் பரவலின் தாக்கத்தோடு நிறுவன நடவடிக்கைகளை வழமை நிலைக்கு மீட்டெடுப்பதும், நாட்டில் நிலவிய தீவிரமான பொருளாதார நெருக்கடி மற்றும் அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு நிலவியபோது ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் அதன் பௌதீக மற்றும் நிதி வளங்களை மிகச் சரியான முறையில் முகாமை செய்துகொண்டு அரசாங்கத்தை அசௌகரியங்களுக்குட்படுத்தாமல் நிறுவனத்தின் இலக்கை அடைந்து கொண்டமை 2022 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட மிகப்பெரும் சவாலாகும்.

✓ இந்த சவாலை சிறப்பான முறையில் எதிர்கொண்டு 2022 ஆம் ஆண்டின் அனைத்து அத்தியாவசிய மற்றும் அவசர / அந்தரங்க பதிப்பு வேலைகளையும் உரிய நேரத்தில் நிறைவு செய்து கொடுத்தமை நாம் பெற்ற குறிப்பிடத்தக்கதொரு வெற்றியாகும்.

✓ அச்சீட்டுத் துறை நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சியோடு மிக வேகமாக மாற்றங்களுக்குள்ளாகும் ஒரு துறையாகும். இந்த வகையில் இத்தகைய மாறுபடும் தொழில் நுட்ப சூழ்நிலைக்கேட்ப உற்பத்தி நடவடிக்கைகளை மாற்றிக் கொள்வதே அரசாங்க அச்சுத் திணைக்களம் எதிர்நோக்கும் மிகப் பெரும் சவாலாகும். இலங்கையில் அதி உயர் பாதுகாப்பான அச்சீட்டுப் பணிகளை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனமாக இத் திணைக்களத்தை மாற்றுவதை இலக்காகக் கொண்டு எதிர்காலத்திற்கான திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கைகளுக்கேற்ப நிலைபேறான அபிவிருத்தி என்ற இலக்கை அடையும் நோக்கத்துடன் வருடாந்த திட்டமிடலை மேற்கொண்டு அதனடிப்படையில் முறையான செயலாற்றுகையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 2025 முடிவில் இலங்கையின் அதி உயர் பாதுகாப்பான அச்சீட்டுப் பணிகளை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனமாகவும் அதேபோல் இலங்கை குடியரசின் அனைத்து அதி உயர் பாதுகாப்பான பதிப்பு வேலைகளை நிறைவேற்றுகின்ற நிறுவனமாகவும் இத் திணைக்களம் திகழ வேண்டுமென்பதே இலக்காகும்.

அத்தியாயம் 03

3.1 நிதிச் செயலாற்றுகை பற்றிய வெளிப்படுத்துகை.

அரசாங்க அச்சுத் திணைக்களம் ACA-F

2022 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கானது.

வருடத்தின் மொத்த நிதிச் செயலாற்றுகைக் கூற்று

வரவு செலவு	குறிப்பு	உண்மை நிலை		
		2022	2021	
வருமானப் பெறுகைகள்		(நடப்பு வருடம்)	(கடந்த வருடம்)	
வருமான வரி	1			
உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2			
சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3			
வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	928,554,128	756,670,731	ஏசீஏ-1
மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		928,554,128	756,670,731	
வருமானம் அல்லாத பெறுகைகள்			-	
திறைசேரி பண முற்பணங்கள்		2,723,005,000	2,484,685,000	ஏசீஏ-3
வைப்புக்கள்		174,092,712	338,681,977	ஏசீஏ-4
முற்பணக் கணக்குகள்		68,816,339	74,204,866	ஏசீஏ-5/5 (அ)
ஏனைய பெறுகைகள்		70,449,499	43,522,036	
மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**3,036,363,550**	**2,941,093,879**	
மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ) + (ஆ)		**3,964,917,678**	**3,697,764,610**	
திறைசேரிக்கு அனுப்பப்பட்டது		**269,000,107**	**9,936**	
தேறிய வருமானப் பெறுகைகளும் வருமானமல்லாத பெறுகைகளும்		**3,695,917,571**	**3,697,754,674**	
கழிக்கப்பட்டது : செலவினம்				
மீண்டுவரும் செலவினம்			-	
சம்பளம், கூலி மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	1,624,272,741	1,450,478,637	
ஏனைய பொருட்கள் சேவைகள்	6	1,435,860,395	1,519,666,669	ஏசீஏ-2(II)
மானியங்கள், நன் கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	5,887,565	6,150,586	
வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	20,970	1,749,621	
மொத்த மீண்டு வரும் செலவினம் (ஈ)		**3,066,041,671**	**2,978,045,513**	
மூலதன செலவினம்				
மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும்	10	56,164,291	59,657,528	
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	39,836,772	126,147,194	
மூலதன மாற்றல்கள்	12	-	1,938,870	ஏசீஏ2(ii)
நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
மனிதவள அபிவிருத்தி	14	2,396,000		
ஏனைய மூலதனச் செலவினங்கள்	15		-	
மொத்த மூலதன செலவினம் (உ)		**98,397,063**	**187,743,592**	
சேமிப்புக் கொடுப்பனவுகள்		370,912,041	198,481,696	ஏசீஏ4
முற்பணக் கொடுப்பனவுகள்		35,466,909	69,906,013	ஏசீஏ5
ஏனைய கொடுப்பனவுகள்		112,079,266	36,207,167	
பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)		**518,458,216**	**304,594,876**	
மொத்த செலவினம் எ = (ஈ+ உ + ஊ)		**3,682,896,950**	**3,470,383,981**	
திசெம்பர் 31இல் உள்ளவாறான பணிமுற்பண மீதி (ஏ =(இ-எ)		**13,020,621**	**227,370,693**	
ஒப்பீட்டு வெளிப்படுத்துகையின் படி திசெம்பர் 31இல் மீதி (ஏ = (இ-எ)		**13,020,621**	**227,370,693**	ஏசீஏ7

3.2 நிதி நிலைமை பற்றிய வெளிப்படுத்துகை

அரசாங்க அச்சுத் திணைக்களம்

2022 திசெம்பர் 31ஆம் திகதியன்றுள்ள நிதி நிலைமை பற்றிய வெளிப்படுத்துகை ACA-P

நிதியல்லாத சொத்துக்கள்	குறிப்பு	நடப்பு வருடம் (2022)	கடந்த வருடம் (2021)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	1,359,122,484	1,322,195,498
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5(ஏ)	196,666,797	230,016,227
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
Vat வரி கட்டுப்பாட்டுக் கணக்கு		41,997,251	367,482
மொத்த சொத்துக்கள்		**1,597,786,532**	**1,552,579,207**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திரைசேறிக்கான தேறிய சொத்துக்கள்		133,864,109	(71,235,559)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் அணியில் உள்ள உபகரணங்கள்	ஏசீஏ-5/(பீ)	1,359,122,484	1,322,195,498,
கூலியும் பணிமுற்பண மீதியும்	ஏசீஏ-5(பீ)	-	-
நடமாடும் சொத்துக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	104,799,939	301,619,268
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,597,786,532**	**1,552,579,207**

07 முதல் 26 ஆம் பக்கம் வரையுள்ள ஏசீஏ- 1 முதல் ஏசீஏ- 7 வரையான படிவங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கணக்குகள் பற்றிய தகவல்களும் குறிப்புக்களும் 27 முதல் 43 ஆம் பக்கம் வரையான ஏனைய கணக்குகள் தொடர்பான விளக்கங்களும் இந்த இறுதிக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிதி பற்றிய வெளிப்படுத்துகையானது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்குப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளுக்கு இணங்க தயாரிக்கப் பட்டுள்ளதுடன் இங்கு வெளிப்படுத்துகைகள் மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளதன் படி மிகவும் பொறுத்தமான கணக்கு வைக்கும் முறை பின்பற்றப்பட்டுள்ளது. இதன்படி மேலே இறுதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் அவற்றின் கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய தகவல்கள் திறைசேரியின் கணக்குக் குறிப்பேட்டுடன் சரி பார்க்கப்பட்டுள்ளது எனவும் அத் தரவுகளோடு சமமாகின்றது எனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

மேலும் நிதி முகாமைக்காக கட்டுக்கோப்பான உள்ளகப் பொறிமுறையொன்று இத்திணைக் களத்தினுள் செயல்படுகின்றது என்றும் இந்தப் பொறிமுறையின் நேர்த்தியை மேற்பார்வை செய்வதற்கும், அதன்படி அந்தப் பொறிமுறை உரிய தரத்தில் செயல்படுவதற்குத் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவ்வப்போது மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதையும் இங்கு உறுதிப்படுத்துகின்றோம்.

பிரதான கணக்கு வைக்கும் உத்தியோகத்தர்	**கணக்கு வைக்கும் உத்தியோகத்தர்**	**முதன்மை கணக்காளர்**
பெயர் :- V.P.K. அனுஷ பல்பிட	பெயர் :- G.K.D. கங்கானி லியனகே	பெயர் :- M.D. ப்ரியலால் பீரிஸ்
பதவி :- செயலாளர் (ஊடக அமைச்சு)	பதவி :- அரசாங்க அழுத்தகர்	பதவி :- முதன்மைக் கணக்காளர்
திகதி :- 2023.05.	திகதி :- 2023.05.	திகதி :- 2023.05.

3.3 நிதி மூலங்கள் பற்றிய வெளிப்படுத்துகை ACA-C

அரசாங்க அச்சுத் திணைக்களம்

2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி நிலைமை பற்றிய வெளிப்படுத்துகை

	நடப்பு வருடம் (2022)	**கடந்த வருடம் (2021)**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி	**-**	**-**
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் மூலம்	906,368,699	744,027,760
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வரவுத் தலைப்புக்கள் மூலமாக சேர்க்கப்பட்ட வருமானம்	45,292,975	57,360,351
பணமுற்பணம் கிடைத்தமை	2,723,005,000	2,484,685,000
வழங்கப்பட்ட கடன்களின் அறவீடுகள்	65,245,371	72,631,821
சேமிப்புப் பெறுகைகள்	174,092,712	338,681,977
வேறு பெறுகைகள் (லெஜர் கணக்கு)	70,449,498	43,522,036
செயற்பாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற மொத்த நிதி (அ)	**3,984,454,255**	**3,740,908,946**
கழிக்கப்பட்டது – செலவுகள்	-	-
சம்பளங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள்	1,623,059,356	2,830,791,525
மானியங்களும் செலவுத் தலைப்பு மாற்றங்களும்	1,305,254,740	7,900,207
ஏனைய செலவுத் தலைப்புகளுக்கான செலவுகள்	174,522,365	416,623,191
நிதிச் செலவுகள் - திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பண முற்பணம்	269,000,107	9,936
முற்பணக் கொடுப்பனவு	35,229,387	68,650,145
சேமிப்புக் கொடுப்பனவுகள்	370,912,041	198,481,696
வேறு கொடுப்பனவுகள் (லெஜர் கணக்கு)	112,100,237	36,207,167
தொழிற்பாடுகளுக்கு செலவழிக்கப்பட்ட நிதி (ஆ)	**3,890,078,233**	**3,558,663,867**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறியகாசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	94,376,022	182,245,078
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி	-	-
உரிமை இழந்த ஒதுக்கீடும் சொத்து விற்பனையும்	-	-
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற நிதி	-	-
கழிக்கப்பட்டது : நிதிச் செலவு	-	-
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	94,376,022	182,245,078
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு செலவழிக்கப்பட்ட மொத்த நிதி (உ)	**94,376,022**	**182,245,078**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(94,376,022)	(182,245,078)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழிக்கப்பட்டது : நிதிச் செலவு	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு செலவழிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான முழு காசுப் பாய்ச்சல் (ஒ) = (எ) - (ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய மாற்றம் (ஓ)=(எ)+(ஒ)	-	-
சனவரி 01ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதி வெளிப்படுத்துகை பற்றிய குறிப்பு

அறிக்கையிடுவதற்கான அடிப்படை

1. **அறிக்கையிடும் கால எல்லை**

   2022 சனவரி 01 முதல் திசெம்பர் 31 வரையுள்ள கால எல்லை இந்த அறிக்கையிடுதற்கான கால எல்லையாகும்.

2. **அளவிடுவதற்கான அடிப்படை**

   நிதி சம்பந்தமான வெளிப்படுத்துகை வரலாற்று ரீதியான செலவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சில சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக்குட்படுத்தி பெறுமதி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. வேறு விதமாக குறிப்பிடப்பட்டிராத போது திருத்தியமைக்கப் பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதி தொடர்பான வெளிப்படுத்துகை கிட்டிய இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. **வருமானங்களை இனங்காணுதல்**

   பரிமாற்றப்படுகின்ற மற்றும் பரிமாற்றப்படாத வருமானங்கள் அவற்றின் வரிகளுக்குட்படும் கால எல்லை பற்றி கவனத்தில் கொள்ளப்படாமல் கணக்குகளின் கால எல்லைக்குள் கிடைக்கப்பெற்ற நிதியின் அடிப்படையிலேயே அடையாளப்படுத்தப்படும்.

4. **சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை இனங்காணுவதும் அளவீடு செய்தலும்**

   சொத்துக்களோடு தொடர்பான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதியாகி அத்தகைய சொத்துக்களை நம்பிக்கையுடன் அளவிட முடியுமாயின் அவ்வாறான சொத்துக்கள், வளங்கள் மற்றும் இயந்திரங்கள், உபகரணங்கள் என அடையாளப்படுத்தப்படும்.

   இதன்போது செலவுப் படிவம் பொருந்தாத சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமானம் கருத்தில் கொள்ளப்படும்.

5. **சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் திரட்டு**

   இந்த திரட்டின் கணக்கு சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டான கணக்காகும்.

6. **பணமும், பணத்திற்கு சமனானவையும்**

   கையிருப்பிலிருக்கும் தேசிய பண நோட்டும் சில்லறை நாணயங்களும் அடங்கலாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியன்று கையிருப்பிலிருக்கும் பணமாகவும் பணத்திற்கு சமனானவையாகவும் கொள்ளப்படும்.

   அறிக்கையிடும் ஒரு நிறுவனத்திற்கே உரிய பரிமாற்றங்களின் போது அரசாங்கக் கணக்குத் திணைக்களத்தின் அனுமதியுடன் அத் தரவுகளை நிதி வெளிப்படுத்துகைகளில் உரிய முறையில் உள்ளடக்க முடியும். அவ்வாறே "அறிக்கையிடும் அடிப்படை" இன் கீழ் அவ்வாறான விஷேட பரிமாற்றங்களுக்குத் தேவையான கண்டுபிடிப்புக்களையும் உள்ளடக்க முடியும்.

3.5 வருமானம் திரட்டுதல் தொடர்பான செயலாற்றுகை

வருமானத் தலைப்பு	வருமானத் தலைப்பின் விபரம்	வருமான மதிப்பீடு		சேர்க்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவு	இறுதி வருமான மதிப்பீடு (%)
20.03.02.05	அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வரவு	800,000,000.00	800,000,000.00	928,554,128.55	116.07%

3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தல் தொடர்பான செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு		உண்மையான செலவு	ஒதுக்கீட்டில் பயன்படுத்திய வீதம்
	ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டு வரும் செலவு	3,160,080,000.00	3,245,000,000.00	3,066,041,671.00	94.49%
மூலதனச் செலவு	288,300,000.00	145,000,000.00	98,397,063.00	67.86%

3.7 நி.பி. 208 இன் படி வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்.

இல.	ஒதுக்கீடு கிடைத்த நிறுவனம்	செலவுத் தலைப்பு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவு	கிடைக்கப் பெற்ற கடைசி ஒதுக்கீட்டில் உபயோகிக்கப்பட்ட விகிதம் (%)
				ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
1.	கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாட்டு, பால் மற்றும் முட்டை சார்ந்த இராஜாங்க அமைச்சு	427-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	52,920.00	52,920.00	52,920.00	100%
2.	வரி மேன்முறையீட்டுச் சபை	102-01-05-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	55,080.00	55,080.00	55,080.00	100%
3.	அரசாங்க தகவல் திணைக்களம்	210-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	43,200.00	43,200.00	43,200.00	100%
4.	நீதி அமைச்சு	110-01-01-0-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	112,759.07	112,759.07	112,759.07	100%
5.		110-01-05-13-2509	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	31,968.00	31,968.00	31,968.00	100%
6.		110-01-02-1409(39)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	2,455,400.00	2,455,400.00	2,455,400.00	100%
7.		110-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	4,242.00	4,242.00	4,242.00	100%
8.		110-01-07-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	62,387.50	62,387.50	62,387.50	100%
9.		110-01-03-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	795,225.00	795,225.00	795,225.00	100%
10.	பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பாண்டங்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் வலுவூட்டல் அமைச்சு	408-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	68,040.00	68,040.00	68,040.00	100%
11.	திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சு	421-1-3-0-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	94,527.00	94,527.00	94,527.00	100%
12.	கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல், அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு	438-01-02-0-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	174,376.80	174,376.80	174,376.80	100%
13.	திறைசேறி நடவடிக்கைத் திணைக்களம்	249-01-01-0-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	135,000.00	135,000.00	135,000.00	100%
14.	புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சு	101-2-6-1409(08)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	73,297.71	73,297.71	73,297.71	100%
15.		101-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	373,065.10	373,065.10	373,065.10	100%
16.		101-02-05-06-1508	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	36,450.00	36,450.00	36,450.00	100%
17.		101-02-08-09-2205	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	84,240.00	84,240.00	84,240.00	100%
18.		101-02-05-1409	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	220,110.00	220,110.00	220,110.00	100%
19.		101-01-01-0-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	86,434.00	86,434.00	86,434.00	100%
20.		101-01-08-00-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	8,991.00	8,991.00	8,991.00	100%

இல.	ஒதுக்கீடு கிடைத்த நிறுவனம்	செலவுத் தலைப்பு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவு	கிடைக்கப் பெற்ற கடைசி ஒதுக்கீட்டில் உபயோகிக்கப்பட்ட விகிதம் (%)
				ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
21.	ஆட்பதிவுத் திணைக்களம்	227-01-01-0-1201-11	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	17,403,884.90	17,403,884.90	17,403,884.90	100%
22.	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	243-1-1-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	53,352.00	53,352.00	53,352.00	100%
23.	பொலிஸ் தலைமையகம்	225-1-1-0-1205	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	2,674,751.75	2,674,751.75	2,674,751.75	100%
24.	தேசிய மரபுரிமைகள், அரங்கு, கலை மற்றும் கிராமிய கலைநுட்ப வலுவூட்டல் இராஜாங்க அமைச்சு	401-01-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	8,991.00	8,991.00	8,991.00	100%
25.	இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழு	010-01-01-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	283,581.00	283,581.00	283,581.00	100%
26.	குடிவரவு குடியகல்வுத் திணைக்களம்	226-01-01-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	1,281,668.00	1,281,668.00	1,281,668.00	100%
27.	கடற்றொழில் மற்றும் நீர்வளங்கள் திணைக்களம்	290-01-01-00-1205	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	6,052,905.40	6,052,905.40	6,052,905.40	100%
28.	அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம்	238-01-01-1409(24)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	2,080,295.25	2,080,295.25	2,080,295.25	100%
29.	கமநல அபிவிருத்தி திணைக்களம்	281-01-01-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	463,897.80	463,897.80	463,897.80	100%
30.		281-02-02-1409	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	8,806,098.00	8,806,098.00	8,806,098.00	100%
31.	கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்	292-01-01-01-2507	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	58,860.00	58,860.00	58,860.00	100%
32.		292-01-01-2507	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	521,126.50	521,126.50	521,126.50	100%
33.		292-02-03-05-2507	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	2,061,700.00	2,061,700.00	2,061,700.00	100%
34.		292-02-03-06-2508	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	113,976.20	113,976.20	113,976.20	100%
35.		292-01-01-2401	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	1,306,630.00	1,306,630.00	1,306,630.00	100%
36.		292-02-02-18-2507	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	975,415.62	975,415.62	975,415.62	100%
37.	பௌத்த அலுவல்கள் திணைக்களம்	201-02-02-005-1508	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	29,537,499.00	29,537,499.00	29,537,499.00	100%
38.		201-01-02-1409(007)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	181,090.00	181,090.00	181,090.00	100%
39.		201-02-02-1409(013)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	174,528.00	174,528.00	174,528.00	100%
40.		201-02-02-1409(11)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	1,090,258.12	1,090,258.12	1,090,258.12	100%
41.		201-02-02-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	223,100.00	223,100.00	223,100.00	100%
42.		201-02-02-1409(015)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	3,721,026.25	3,721,026.25	3,721,026.25	100%
43.		201-02-02-00-1409 (007)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	464,312.50	464,312.50	464,312.50	100%
44.		201-02-02-006-1508	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	900,720.00	900,720.00	900,720.00	100%

இல.	ஒதுக்கீடு கிடைத்த நிறுவனம்	செலவுத் தலைப்பு	ஒதுக்கீட்டின் நோக்கம்	ஒதுக்கீடு		உண்மை செலவு	கிடைக்கப் பெற்ற கடைசி ஒதுக்கீட்டில் உபயோகிக்கப்பட்ட விகிதம் (%)
				ஆரம்ப ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
45.	நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்	217-01-01-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	159,300.00	159,300.00	159,300.00	100%
46.	அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம்	233-01-01-1201	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	483,230.45	483,230.45	483,230.45	100%
47.	றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை	111-01-05-1201(11)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	363,150.00	363,150.00	363,150.00	100%
48.	சுகாதார அமைச்சு	111-01-02-0-1201(11)	அச்சீட்டுச் செலவுகளுக்கானகொடுப்பனவுகள்	133,009.26	133,009.26	133,009.26	100%
